1984 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை அறிவிக்க வில்லை. அதே போல், இதனால் எத்தனை கிராமங்கள் பயனடையும் என்பதையும் சொல்லவில்லை. அந்த விவரங் களைச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாகச் சொன்ன கேள்வி சரி. எத்தனை கிராமங்கள் பயனடையும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், மதிப்பீட்டுத்தொகை ரூ. 96.55 இலட்சமாக இருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 133 இலட்சம் என்று சொன்னேன்.

கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்டம்.

220—(*வினா எண் 12186) திரு. கு. ரமணி, மற்றும் திரு. மா. சின்ராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்ட வேலை தற்போது எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது ?

(ஆ) அணை கட்டும் வேலை இரண்டாவது கட்டம் முடிந்து மூன்றாவது கட்டம் எப்பொழுது ஆரம்பமாகும் ?

(இ) தற்போது கோவை மாநகர மக்களுக்குத் தலைக்கு எவ்வளவு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திட்டமிடப் பட்டுள்ள 9 நீர்த்தேக்கத் தொட்டிகள் அனைத்திலும் கட்டிட வேலைகள் முடிவு பெற்று 7 நீர்த்தேக்கத் தொட்டிகள் செயல் படத் தொடங்கிவிட்டன. மீதி உள்ள நீர்த் தொட்டிகளும் 1984 மே மாதத்தில் செயல்படத் தொடங்கும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

(ஆ) அணை தற்பொழுது 868 மீட்டரிலிருந்து 878.5 மீட்டர் வரை உயர்த்தப்பட்டு மதகுகளுக்கு இடையில் பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது.

(இ) ஒரு நாளைக்கு நபர் ஒன்றுக்கு சுமார் 113 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அணையினுடைய வேலை அநேகமாக முடிந்துவிட்டு, இறுதியாக போடவேண்டிய மதகுகள் வேலை பாக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால், இந்தத் திட்டத்தின்படி—கோவை நகராட்சி, இப்போது மாநகராட்சியாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது—அந்த மாநகராட்சி முழுவதற்கும், குடிதண்ணீர் கிடைப்பதற்கு எந்தவிதமான தடைக்கும் கஷ்டத்திற்கும் இடமில்லை. 1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதிக்குள் கட்டாயமாக 9 நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் தண்ணீர் நிரப்பி, சகல இடங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படும். சிங்காநல்லூர் முழுவதற்கும் விநியோகிக்கப்படும் என்று இதே மன்றத்தில் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி நிறைவேறாமல் இருப்பதுடன், தண்ணீரின் அளவும் குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலில், 1984ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் இத்திட்டம் செயல்படத் தொடங்கும். மற்ற இரண்டு மேல்நிலை தொட்டிகளும்—கட்டிடம் கட்டுவதில் காலதாமதமாகியிருக்கிறது. மற்றபடி, குடிதண்ணீரைப் பொறுத்தவரை 113 லிட்டர் என்பது மிக அதிகமானது. நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். எந்தவிதமான தவறும் நடந்து விட்டதாக அரசு கருதவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தவறு நடந்து விட்டது என்று அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்று நான் கேள்வியே போடவில்லை. பிரச்னை அதுவல்ல. அந்த அணைக்கட்டு வேலை முழுவதும் முடிந்து நீர்த்தேக்கத்தை எந்த அளவு கொண்டு வர முடியுமோ அந்த அளவு கொண்டுவரப்பட்டபின் தினமும் நீர் விநியோகம் கோவை மாநகரத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் கொடுப்போம் என்று அறிவித்து இருக்கிறார்கள். மழையும் பெய்து எல்லா இடங்களிலும் நிரம்பியிருக்கிறது. அணையும் நிரம்பியிருக்கிறது. அப்படியிருக்கும் போது அந்தத் தண்ணீர் விடுவதை ஒரு நாள் விட்டு ஒரு நாள் எனத் தெரிவிக்கிறார்களே அதற்காவது என்ன காரணம் என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-3-1984 முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கப்படும் என்று மாநகராட்சி அறிவித்தது. ஆனால், முதல்வரின் தலையீட்டின் பேரில் அப்படி நடக்காது ; தினமும் தண்ணீர் கொடுக்கப்படும். மற்றும்

குழாய்களிலில்லாமல் சிரமப்படுகிற இடங்களுக்குச் சென்னையிலே எப்படி லாரிகள் மூலமாக எல்லாம் தண்ணீர் கொடுத்து, தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் செய்யப்படுகிறதோ அப்படி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 10-3-1984-லிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்ல—தினமும். தண்ணீர் கொடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கென்று முதலில் திட்டமிடப்பட்ட சிறுவாணிக் குடிநீர் திட்டம் இறுதியாக கோவை மாநகராட்சியோடு சேர்க்கப்பட்ட ஏரியாக்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. அப்படி விஸ்தரிக்கப்பட்ட ஏரியாக்களில் 3 உயர்நிலைத் தொட்டிகள் எனது தொகுதிக்குட்பட்ட, சங்கனூர், ரத்தினகிரி, கும்பகோணம்புதூர் ஆகிய 3 இடங்களில் கட்டப்பட வேண்டும். இந்தப் பணிகள் இன்னும் துவக்கப்படவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படித் துவக்கப்படாத அந்தப் பணியை விரைவாகத் துவக்கி, அந்தப் பகுதிகளுக்கும் இந்த 113 லிட்டர் தண்ணீர் கிடைக்க உடனடியாக இந்த வசதியை அளிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விரிவான பதில் தருகின்றேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி போட்டதே அந்தப் பகுதிக்காகத்தான். கேள்வி இணைக்கப்பட்டபொழுது அதை சேர்க்காமல் விட்டு விட்டார்கள். இருந்தாலுங்கூட இப்பொழுது கோடைக் காலம் வருகிற நேரத்தில் உயர்நிலைப் தொட்டிகள் கட்டுவது தாமதப்பட்டாலும் எல்லா பகுதிகளிலும் குழாய்கள் பதிக்கப் பட்டு விட்டன—அதிலிருந்து பைலட் சப்ளை பைப் மூலமாக பவுன்டென் மூலமாக குடி நீர் வழங்க, அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறுகிய கால வினா போட்டால் கூட அதிலிருந்து எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம். அப்படி மாண்புமிகு உறுப்பினர் செய்வார் என எதிர்பார்க்கிறேன்.